(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 100.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 நவம்பர் 13, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1350/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற திருகோணமலை மாவட்டத்தின் வீதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) கிண்ணியா பிரதேசத்தின் சனத்தொகை மற்றும் அப்பிரதேசத்திற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக்கு அமைவாக, கிண்ணியா - கொழும்பு பிரதான வீதியை முன்னுரிமை வழங்கி விஸ்தரிக்க வேண்டும் என்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கு அருகே பாடசாலைகள் அமைந்துள்ளதுடன், அதிக வாகன நெரிசல் நிலவுவதையும், பாதசாரிகளுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கிண்ணியா – கொழும்பு பிரதான வீதியின் அகலம் யாது;

(ii) மேற்படி வீதி ஒரே திசையில் மாத்திரம் வாகனம் பயணம் செய்யக்கூடிய ஒருவழிப் பாதையா;

(iii) இன்றேல், இரு திசைகளிலும் வாகனம் பயணம் செய்யக்கூடிய இருவழிப் பாதையா;

(iv) மேற்படி வீதியை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், உத்தேச வீதியின் நீளம் மற்றும் அகலம் யாது;

(vi) அதற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவினம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1352/2025

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளையும், சட்டவிரோத மீன்பிடிப் படகுகளையும் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) அதற்கான கண்காணிப்பு மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகளை வலுவூட்ட எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் —

(i) காரணமாக முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் மீன்பிடி உற்பத்தியின் தரம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாக்கம் யாது;

(ii) இதன் காரணமாக மேற்படி மாவட்டங்களில் மீனவர்களின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) மேற்படி விடயம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சாதாரண மீனவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தையும், அவர்களின் வருமானத்தையும் உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) இவ்விடயத்தைக் கட்டுப்படுத்துவதற்கு போதியளவில் சட்டம் அமுல்படுத்தப் படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) இதனைக் கட்டுப்படுத்துவதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு, இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை பொலிசாருக்கிடையில் சிறந்ததொரு ஒருங்கிணைப்பு பேணிவரப்படுகின்றதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1354/2025

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார,— பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ஒவ்வொரு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு குடும்ப அலகாகக் கருதும்போது ஓய்வுபெற்ற ஒருவரின் ஓய்வூதியமானது, தனிநபரின் நலன் என்பதை விடவும் பொது நலனாகக் கருதப்படுவதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்கமைய ஓய்வூதியதாரரொருவர் மரணித்ததன் பின்னர் அவருடைய ஓய்வூதியத்தை வழங்குவது தொடர்பாக பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1395/2025

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், பொத்துவில் மற்றும் லாஹுகல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாரிய குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் நோக்கில் 2018, 2019, மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 150 மில்லியன், 25 மில்லியன் மற்றும் 50 மில்லியன் ரூபாய் செலவிட்டு கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் 'ஹெட ஓயா' நீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கின்ற மக்களின் குடிநீர் தேவைப்பாட்டை பூர்த்தி செய்ய முடியுமென்பதால் குறித்த கருத்திட்டத்தை மீள நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1434/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தாமை தொடர்பாக 2024 ஒக்தோபர் மாதத்திலிருந்து தொழில் வழங்குநர்களுக்கு அறிவிக்க தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தாமை தொடர்பாக மிகைக் கட்டண விதிப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) நீண்ட காலமாக மிகைக் கட்டண அறவீட்டுச் செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் 2022 பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் சவாலுக்குட்பட்ட வணிகங்களுக்கு மிகைக் கட்டணம் விதிக்கின்றபோது நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(5) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், 2025 நவம்பர் 15 ஆம் திகதி சனிக்கிழமை, 17ஆம் திகதி திங்கட்கிழமை, 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19 ஆம் திகதி புதன்கிழமை, 20 ஆம் திகதி வியாழக்கிழமை, 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 22 ஆம் திகதி சனிக்கிழமை, 24 ஆம் திகதி திங்கட்கிழமை, 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 26 ஆம் திகதி புதன்கிழமை, 27 ஆம் திகதி வியாழக்கிழமை, 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 29 ஆம் திகதி சனிக்கிழமை, மற்றும் 2025 டிசம்பர் 01 ஆம் திகதி திங்கட்கிழமை, 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 03 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய நாட்கள் ''ஒதுக்கீட்டுச்'' சட்டமூலம் (2026) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாக இருக்குமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், ''ஒதுக்கீட்டுச்'' சட்டமூலம் (2026) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2025 நவம்பர் 17 ஆம் திகதி திங்கட்கிழமை, 24 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 2025 டிசம்பர் 01 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2026) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2025 நவம்பர் 15 ஆம் திகதி சனிக்கிழமை, 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 20 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும், 22 ஆம் திகதி சனிக்கிழமை, 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 27 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும், 29 ஆம் திகதி சனிக்கிழமை, மற்றும் 2025 டிசம்பர் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 03 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2026) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2025 நவம்பர் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 4),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2026) இன் பரிசீலனைக்காக ஒதுக்கப்பட்ட தினமாகிய 2025 டிசம்பர் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட ஐந்தாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 நவம்பர் 07) [1].

*2.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ், செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 20 ஆம் திகதிய 2454/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவின் (ஊ) எனும் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 50 ஆம் பிரிவின் கீழ் தன்னார்வ இளைப்பாறுகைத் திட்டத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஓகத்து 26 ஆம் திகதிய 2451/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ருகுணு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழ் 2024.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ருகுணு பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழ் 2025.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.08.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.09.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2023),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை (2023),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழ் 2025.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.08.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.09.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆண்டறிக்கை (2022),— 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் 2024.07.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.07.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.08.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.02.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.02.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொது விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொது விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், — களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிரெட்டின் வருடாந்த அறிக்கை (2022/2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2025.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.03.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிரெட்டின் 2022/2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2023),— 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகச் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் VI ஆம் பகுதியின் 29 ஆம் பிரிவின் கீழ் 2025.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2023.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.07.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.08.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, தேசிய இளைஞர் சேவைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் 2024.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.06.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.06.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2022),— 1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, இலங்கை நீதிபதிகள் நிறுவகச் சட்டத்தின் 10(8) ஆம் பிரிவின் கீழ் 2023.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.05.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2023),— 1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, இலங்கை நீதிபதிகள் நிறுவகச் சட்டத்தின் 10(8) ஆம் பிரிவின் கீழ் 2025.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.05.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கை (2022),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2024.07.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கை (2023),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2025.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*25.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---